ஸ்ரீ:



ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே ஸ்ரீ சடகோபாய நம:
ஸ்ரீமதே ஸ்ரீ ராமானுஜாய நம:
ஸ்ரீமதே ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகாய நம:
ஸ்ரீமதே ஸ்ரீமதாதிவண்சடகோப யதீந்த்ர மஹாதேசிகாய நம:
ஸ்ரீமதே ஸ்ரீவண்சடகோப ஸ்ரீ வேதாந்ததேசிக யதீந்த்ர மஹாதேசிகாய நம:
ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ திவ்ய பாதுகா சேவக
ஸ்ரீவண்சடகோப ஸ்ரீ நாராயண யதீந்த்ர மஹாதேசிகாய நம:

# நாலாயிர திவ்ய ப்ரபந்தம்

# நான்முகன் திருவந்தாதி


## ஸ்ரீ அஹோபில மட தயாரிப்பு

(May 2000)



This version of 4000 Dhivya Prabhandham is prepared by a group of Sri Vaishnavas from Bahrain for Sri Ahobila Muth for easy recitation of the verses. Use of this MS-Word document for commercial purposes is prohibited. For more information contact Sri Venkat at rmvenkat@yahoo.com.

திருமழிசைப்பிரானடி வாழ்த்து

நாரயணன் படைத்தான் நான்முகனை*
நான்முகனுக்கு ஏரார் சிவன்பிறந்தான் என்னும்சொல்*
சீரார்மொழி செப்பி வாழலாம் நெஞ்சமே*
மொய்பூமழிசைப் பரனடியே வாழ்த்து

2382:##
நான்முகனை* நாராயணன் படைத்தான்*
நான்முகனும் தான்முகமாய்ச்* சங்கரனைத் தான்படைத்தான்*
யான்முகமாய் அந்தாதி மேலிட்டு* அறிவித்தேன் ஆழ்பொருளை*
சிந்தாமல் கொண்மின் நீர்தேர்ந்து (2) 1

2383:
தேருங்கால் தேவன்* ஒருவனே என்றுரைப்பர்*
ஆருமறியார் அவன்பெருமை*
ஓரும் பொருள்முடிவும் இத்தனையே* எத்தவம் செய்தார்க்கும்*
அருள்முடிவது ஆழியான் பால் 2

2384:
பாலில் கிடந்ததுவும்* பண்டரங்கம் மேயதுவும்*
ஆலில் துயின்றதுவும் ஆரறிவார்*
ஞாலத்து ஒருபொருளை* வானவர்தம் மெய்ப்பொருளை*
அப்பில் அருபொருளை* யானறிந்தவாறு? 3

2385:
ஆறு சடைக்கரந்தான்* அண்டர்கோன் தன்னோடும்*
கூறுடையன் என்பதுவும்* கொள்கைத்தே*
வேறொருவர் இல்லாமை* நின்றானை எம்மானை*
எப்பொருட்கும் சொல்லானைச்* சொன்னேன் தொகுத்து 4

2386:
தொகுத்த வரத்தனாய்த்* தோலாதான் மார்வம்*
வகிர்த்தவளை உகிர்த்தோள் மாலே*
உகத்தில் ஒருநான்று நீயுயர்த்தி* உள்வாங்கி நீயே*
அருநான்கும் ஆனாய் அறி 5

2387:
அறியார் சமணர்* அயர்த்தார் பவுத்தர்*
சிறியார் சிவப்பட்டார்செப்பில்*
வெறியாய மாயவனை மாலவனை* மாதவனை ஏத்தாதார்*
ஈனவரே ஆதலால் இன்று. 6

2388:
இன்றாக* நாளையேயாக*
இனிச்சிறிதும் நின்றாக* நின்னருள் என் பாலதே*
நன்றாக நான் உன்னைஅன்றி* இலேன்கண்டாய்*
நாரணனே நீயென்னை அன்றியிலை 7

2389:
இலைதுணை மற்றென்னெஞ்சே* ஈசனை வென்ற*
சிலைகொண்ட செங்கண்மால் சேரா*
குலைகொண்ட ஈரைந்தலையான்* இலங்கையை ஈடழித்த*

கூரம்பன் அல்லால் குறை 8

2390:
குறைகொண்டு நான்முகன்* குண்டிகைநீர் பெய்து*
மறைகொண்ட மந்திரத்தால் வாழ்த்தி*
கறைகொண்ட கண்டத்தான்* சென்னிமேல் ஏறக் கழுவினான்*
அண்டத்தான் சேவடியை ஆங்கு 9

2391:
ஆங்காரவாரம் அதுகேட்டு*
அழலுமிழும் பூங்கார் அரவணையான்* பொன்மேனி*
யாம்காண வல்லமே அல்லமே?* மாமலரான் வார்சடையான்*
வல்லரே அல்லரே? வாழ்த்து 10

2392:
வாழ்த்துக வாய்* காண்க கண் கேட்க செவி*
மகுடம் தாழ்த்தி வணங்குமின்கள்* தண்மலரால்*
சூழ்த்த துழாய் மன்னுநீள்முடி* என் தொல்லைமால் தன்னை*
வழாவண்கை கூப்பி மதித்து 11

2393:
மதித்தாய்போய் நான்கின்* மதியார்போய் வீழ*
மதித்தாய் மதிகோள் விடுத்தாய்*
மதித்தாய் மடுக்கிடந்த* மாமுதலை கோள்விடுப்பான்*
ஆழிவிடற்கிரண்டும் போய் இரண்டின் வீடு 12

2394:
வீடாக்கும்* பெற்றியறியாது*
மெய்வருத்திக் கூடாக்கி* நின்றுண்டு கொண்டுழல்வீர்*
வீடாக்கும் மெய்ப்பொருள்தான்* வேத முதற்பொருள்தான்*
விண்ணவர்க்கு நற்பொருள்தான்* நாராயணன் 13

2395:
நாராயணன்* என்னையாளி*
நரகத்துச் சேராமல்* காக்கும் திருமால்*
தன்பேரான பேசப்பெறுத* பிணச்சமயர் பேசக்கேட்டு*
ஆசைப்பட்டு ஆழ்வார் பலர் 14

2396:
பலதேவரேத்தப்* படிகடந்தான் பாதம்*
மலரேற விட்டிறைஞ்சி* வாழ்த்த வலராகில்*
மார்க்கண்டன் கண்ட வகையே* வருங்கண்டீர்*
நீர்க்கண்டன் கண்ட நிலை 15

2397:
நிலைமன்னும் என்னெஞ்சம்* அந்நான்று*
தேவர் தலைமன்னர்* தாமே மாற்றாக*
பலமன்னர் போர்மாள* வெங்கதிரோன் மாயப் பொழில்மறைய*
தேராழியால் மறைத்தாரால் 16

2398:
ஆலநிழற்கீழ்* அறநெறியை*
நால்வர்க்கு மேலையுகத்துரைத்தான்* மெய்த்தவத்தோன்*

ஞாலம் அளந்தானை* ஆழிக் கிடந்தானை*
ஆல்மேல் வளர்ந்தானைத்* தான்வணங்குமாறு 17

2399:
மாறாய தானவனை* வள்ளுகிரால்*
மார்விரண்டு கூறாகக்* கீறிய கோளரியை*
வேறாக ஏத்தியிருப்பாரை* வெல்லுமே*
மற்றவரை சார்த்தி இருப்பார் தவம் 18

2400:
தவம்செய்து* நான்முகனால் பெற்ற வரத்தை*
அவம்செய்த* ஆழியாயன்றே*
உவந்துஎம்மைக் காப்பாய்நீ* காப்பதனை ஆவாய்நீ*
வைகுந்தம் ஈப்பாயும்* எவ்வுயிர்க்கும் நீ 19

2401:
நீயே உலகெலாம்* நின்னருளே நிற்பனவும்*
நீயே* தவத்தேவ தேவனும்*
நீயே எரிசுடரும் மால்வரையும்* எண்திசையும்*
அண்டத்து இருசுடருமாய இவை 20

2402:
இவையா! பிலவாய்* திறந்தெரி கான்ற*
இவையா!* எரிவட்டக் கண்கள்*
இவையா எரிபொங்கிக் காட்டும்* இமையோர் பெருமான்*
அரிபொங்கிக் காட்டும் அழகு ? 21

2403:
அழகியான் தானே* அரியுருவன் தானே*
பழகியான்* தாளே பணிமின்*
குழவியாய்த் தான் ஏழுலகுக்கும்* தன்கைக்கும் தன்மையனே*
மீனாய் உயிரளிக்கும் வித்து 22

2404:
வித்துமிடல் வேண்டுங் கொல்லோ* விடையடர்த்த*
பத்தி உழவன்* பழம்புனத்து*
மொய்த்தெழுந்த கார்மேகமன்ன* கருமால் திருமேனி*
நீர்வானம் காட்டும் நிகழ்ந்து. 23

2405:
நிகழ்ந்தாய் பால்பொன்பசுப்புக்* கார்வண்ணம் நான்கும்*
இகழ்ந்தாய்* இருவரையும் வீயப்*
புகழ்ந்தாய் சினப்போர்ச்சு வேதனைச்* சேனாபதியாய்*
மனப்போர் முடிக்கும் வகை 24

2406:
வகையால் மதியாது* மண்கொண்டாய்*
மற்றும் வகையால்* வருவதொன்றுண்டே*
வகையால் வயிரம் குழைத்துண்ணும்* மாவலிதான் என்னும்*
வயிர வழக்கொழித்தாய் மற்று 25

2407:
மற்றுத் தொழுவார்* ஒருவரையும் யானின்மை*

கற்றைச் சடையான்* கரிக்கண்டாய்*
எற்றைக்கும் கண்டுகொள் கண்டாய்* கடல்வண்ணா*
யான் உன்னைக் கண்டு கொள்கிற்குமாறு 26

2408:
மால்தான்* புகுந்த மடநெஞ்சம்*
மற்றதுவும் பேறுகக்* கொள்வனோ பேதைகாள்*
நீறுடி தான்காண மாட்டாத* தாரகலச் சேவடியை*
யான்காண வல்லேற்கு இது 27

2409:
இதுவிலங்கை ஈடழியக்* கட்டிய சேது*
இதுவிலங்கு வாலியை வீழ்த்தது*
இதுவிலங்கை தானொடுங்க வில்நுடங்கத்* தண்தார் இராவணனை*
ஊனொடுங்க எய்தான் உகப்பு. 28

2410:
உகப்புருவன் தானே* ஒளியுருவன் தானே*
மகப்புருவன் தானே மதிக்கில்*
மிகப்புருவம் ஒன்றுக்கொன்று* ஓசனையான் வீழ*
ஒருகணையால் அன்றிக்கொண்டு எய்தான் அவன். 29

2411:
அவன் என்னையாளி* அரங்கத்து அரங்கில்*
அவனென்னை எய்தாமல் காப்பான்*
அவன்என்னது உள்ளத்து* நின்றான் இருந்தான் கிடக்குமே*
வெள்ளத் தரவணையின் மேல். 30

2412:
மேல் நான்முகன்* அரனையிட்ட விடுசாபம்*
தான் நாரணன் ஒழித்தான்* தாரகையுள்*
வானோர் பெருமானை* ஏத்தாத பேய்காள்*
பிறக்கும் கருமாயம் பேசின் கதை 31

2413:
கதைப்பொருள்தான்* கண்ணன் திருவயிற்றின் உள்ள*
உதைப்பளவு போதுபோக்கு இன்றி*
வதைப் பொருள்தான் வாய்ந்த குணத்துப்* படாதது அடைமினோ*
ஆய்ந்த குணத்தான் அடி 32

2414:
அடிச்சகடம் சாடி* அரவாட்டி*
யானை பிடித்தொசித்துப்* பேய்முலை நஞ்சுண்டு*
வடிப்பவள வாய்ப்பின்னை தோளுக்கா* வல்லேற்ற எருத்திறுத்து*
கோப்பின்னு மானான் குறிப்பு. 33

2415:
குறிப்பு எனக்குக்* கோட்டியூர் மேயானையேத்த*
குறிப்பு எனக்கு நன்மை பயக்க*
வெறுப்பனோ வேங்கடத்து மேயானை* மெய்வினைநோய் எய்தாமல்*
தான்கடத்தும் தன்மையான் தாள்

2416:##

தாளால் உலகம்* அளந்த அசைவேகொல்*
வாளாகிடந்தருளும்* வாய்திறவான்*
நீளோதம் வந்தலைக்கும் மாமயிலை* மாவல்லிக்கேணியான்*
ஐந்தலைவாய் நாகத்தணை? 35

2417:##
நாகத்தணைக் குடந்தை* வெஃகா திருவெவ்வுள்*
நாகத்தணை அரங்கம் பேரன்பில்*
நாகத்தணைப் பாற்கடல் கிடக்கும்* ஆதி நெடுமால்*
அணைப்பார் கருத்தன் ஆவான். 36

2418:
வானுலவு தீவளி* மாகடல் மாபொருப்பு*
தானுலவு வெங்கதிரும்* தண்மதியும்*
மேனிலவு கொண்டல் பெயரும்* திசையெட்டும் சூழ்ச்சியும்*
அண்டந் திருமால் அகைப்பு. 37

2419:
அகைப்பில் மனிசரை* ஆறு சமயம் புகைத்தான்*
பொருகடல்நீர் வண்ணன்*
உகைக்குமேல் எத்தேவர் வாலாட்டும்* எவ்வாறு செய்கையும்*
அப்போது ஒழியும் அழைப்பு. 38

2420:
அழைப்பன்* திருவேங்கடத்தானைக் காண*
இழைப்பன்* திருக்கூடல் கூட*
மழைப்பேரருவி* மணிவரன்றி வந்திழிய*
யானை வெருவி* அரவொடுங்கும் வெற்பு. 39

2421:
வெற்பென்று* வேங்கடம் பாடினேன்*
வீடாக்கி நிற்கின்றேன்* நின்று நினைக்கின்றேன்*
கற்கின்ற நூல்வலையில் பட்டிருந்த* நூலாட்டி கேள்வனார்*
கால்வலையில் பட்டிருந்தேன் காண். 40

2422:
காணலுறுகின்றேன்* கல்லருவி முத்து உதிர*
ஓண விழவில் ஒலியதிர*
பேணி வருவேங்கடவா!* என்னுள்ளம் புகுந்தாய்*
திருவேங்கடம் அதனைச் சென்று. 41

2423:
சென்று வணங்குமினோ* சேணுயர் வேங்கடத்தை*
நின்று வினைகெடுக்கும் நீர்மையால்*
என்றும் கடிக்கமல நான்முகனும்* கண் மூன்றத்தானும்*
அடிக்கமலம் இட்டேத்தும் அங்கு. 42

2424:
மங்குல்தோய் சென்னி* வடவேங்கடத்தானை*
கங்குல் புகுந்தார்கள்* காப்பணிவான்*
திங்கள் சடையேற வைத்தானும்* தாமரை மேலானும்*
குடையேறத் தாம்குவித்துக் கொண்டு. 43

2425:
கொண்டு குடங்கால்* மேல்வைத்த குழவியாய்*
தண்ட அரக்கன் தலை* தாளால் பண்டெண்ணி*
போம்குமரன் நிற்கும்* பொழில்வேங்கட மலைக்கே*
போம் குமரருள்ளீர் புரிந்து. 44

2426:
புரிந்து மலரிட்டுப்* புண்டரீகப் பாதம்*
பரிந்து படுகாடு நிற்ப*
தெரிந்தெங்கும் தானோங்கி நிற்கின்றான்* தண்ணருவி வேங்கடமே*
வானோர்க்கும் மண்ணோர்க்கும் வைப்பு. 45

2427:
வைப்பன் மணிவிளக்கா* மாமதியை*
மாலுக்கென்று எப்பொழுதும்* கைநீட்டும் யானையை*
எப்பாடும் வேடுவளைக்கக்* குறவர் வில்லெடுக்கும் வேங்கடமே*
நாடுவளைத் தாடுமேல் நன்று. 46

2428:
நன்மணி வண்ணனூர்* ஆளியும் கோளரியும்*
பொன்மணியும்* முத்தமும் பூமரமும்*
பன்மணி நீரோடு பொருதுருளும்* கானமும் வானரமும்*
வேடுமுடை வேங்கடம்.

2429:
வேங்கடமே* விண்ணோர் தொழுவதுவும்*
மெய்ம்மையால் வேங்கடமே* மெய்வினைநோய் தீர்ப்பதுவும்*
வேங்கடமே தானவரை வீழத்* தன்னாழிப் படைதொட்டு*
வானவரைக் காப்பான் மலை. 48

2430:
மலையாமை மேல்வைத்து* வாசுகியைச் சுற்றி*
தலையாமை தானொருகை பற்றி*
அலையாமல் பீறக்கடைந்த* பெருமான் திருநாமம்*
கூறுவதே யாவர்க்கும் கூற்று. 49

2431:
கூற்றமும் சாரா* கொடுவினையும் சாரா*
தீ மாற்றமும்* சாரா வகையறிந்தேன்*
ஆற்றங்கரை கிடக்கும்* கண்ணன் கடல்கிடக்கும்*
மாயன் உரைக்கிடக்கும்* உள்ளத்து எனக்கு. 50

2432:
எனக்காவார்* ஆரொருவரே*
எம்பெருமான் தனக்காவான்* தானே மற்று அல்லால்*
புனக்காயா வண்ணனே* உன்னைப் பிறர் அறியார்*
என்மதிக்கு* விண்ணெல்லாம் உண்டோ விலை? 51

2433:
விலைக்கு ஆட்படுவர்* விசாதியேற்றுண்பர்*
தலைக்காட்பலி திரிவர் தக்கோர்*
முலைக்கால் விடமுண்ட வேந்தனையே* வேருகவேத்தாதார்*
கடம் உண்டார் கல்லாதவர். 52

2434:
கல்லாதவர்* இலங்கை கட்டழித்த*
காகுத்தன் அல்லால்* ஒருதெய்வம் யானிலேன்*
பொல்லாத தேவரை* தேவர் அல்லாரை*
திருவில்லாத் தேவரைத்* தேறல்மின் தேவு. 53

2435:
தேவராய் நிற்கும் அத்தேவும்*
அத்தேவரில் மூவராய் நிற்கும்* முதுபுணர்ப்பும்*
யாவராய் நிற்கின்றது எல்லாம்* நெடுமால் என்றோராதார்*
கற்கின்றது எல்லாம் கடை. 54

2436:
கடை நின்று அமரர்* கழல் தொழுது*
நாளும் இடை நின்ற இன்பத்தர் ஆவர்*
புடைநின்ற நீரோத மேனி* நெடுமாலே*
நின் அடியை யாரோத* வல்லார் அவர்? 55

2437:
அவர் இவர் என்று இல்லை* அனங்கவேள் தாதைக்கு*
எவரும் எதிர் இல்லை கண்டீர்*
உவரிக் கடல் நஞ்சம் உண்டான்* கடன் என்று*
வாணற்கு உடன் நின்று தோற்றான் ஒருங்கு. 56

2438:
ஒருங்கிருந்த நல்வினையும்* தீவினையும் ஆவான்*
பெருங்குருந்தம் சாய்த்தவனே பேசில்*
மருங்கிருந்த வானவர்தாம் தானவர்தாம்* தாரகைதான்*
என் நெஞ்சம் ஆனவர்தாம்* அல்லாதது என்? 57

2439:
என்நெஞ்ச மேயான்* இருள் நீக்கி எம்பிரான்*
மன்அஞ்ச முன்னொரு நாள்* மண் அளந்தான்*
என்நெஞ்சம் மேயானை* இல்லா விடை ஏற்றான்*
வெவ்வினை தீர்த்து* ஆயானுக்கு ஆக்கினேன் அன்பு. 58

2440:
அன்பாவாய்* ஆரமுதம் ஆவாய்*
அடியேனுக்கு இன்பாவாய்* எல்லாமும் நீயாவாய்*
பொன்பாவை கேள்வா* கிளரொளிஎன் கேசவனே*
கேடின்றி ஆள்வாய்க்கு* அடியேன்நான் ஆள். 59

2441:
ஆட்பார்த்து உழிதருவாய்* கண்டுகொள் என்று*
நின்தாள் பார்த்து உழிதருவேன்* தன்மையை*
கேட்பார்க்கு அரும்பொருளாய் நின்ற* அரங்கனே*
உன்னை விரும்புவதே* விள்ளேன் மனம் 60

2442:
மனக்கேதம் சாரா* மதுசூதன் தன்னை*
தனக்கேதான்* தஞ்சமாக் கொள்ளில்*
எனக்கேதான்* இன்றுஒன்றி நின்று உலகையேழ்*

ஆணை ஓட்டினான்* சென்று ஒன்றி நின்ற திரு. 61

2443:
திருநின்ற பக்கம்* திறவிது என்றோரார்*
கருநின்ற கல்லார்க்கு உரைப்பர்*
திருவிருந்த மார்பின்* சிரீதரன்தன் வண்டுஉலவு தண்துழாய்*
தார்தன்னைச் சூடித் தரித்து. 62

2444:
தரித்திருந்தேன் ஆகவே* தாரா கணப்போர்*
விரித்துரைத்த* வெந்நாகத்துன்னை*
தெரித்தெழுதி வாசித்தும் கேட்டும்* வணங்கி வழிபட்டும்*
பூசித்தும் போக்கினேன் போது. 63

2445:
போதான இட்டிறைஞ்சி ஏத்துமினோ*
பொன்மகரக் காதானை* ஆதிப் பெருமானை*
நாதானை நல்லானை நாரணனை* நம்ஏழ் பிறப்பறுக்கும் சொல்லானை*
சொல்லுவதே சூது. 64

2446:
சூதாவது* என்னெஞ்சத்து எண்ணினேன்*
சொல்மாலை மாதாய* மாலவனை மாதவனை*
யாதானும் வல்லவா*சிந்தித்து இருப்பேற்கு*
வைகுந்தத்து இல்லையோ* சொல்லீர் இடம்? 65

2447:
இடமாவது* என்னெஞ்சம் இன்றெல்லாம்*
பண்டு படநாகணை* நெடியமாற்கு*
திடமாக வையேன்* மதிசூடி தன்னோடு*
அயனைநான் வையேன்* ஆட்செய்யேன் வலம். 66

2448:
வலமாக* மாட்டாமை தானாக*
வைகல் குலமாக* குற்றம்தானாக*
நலமாக நாரணனை நாபதியை* ஞானப் பெருமானை*
சீரணனை* ஏத்தும் திறம். 67

2449:
திறம்பேன் மின்கண்டீர்* திருவடிதன் நாமம்*
மறந்தும் புறந்தொழா மாந்தர்*
இறைஞ்சியும் சாதுவராய்ப்* போதுமின்கள் என்றான்*
நமனும்தன்* தூதுவரைக் கூவிச் செவிக்கு. 68

2450:
செவிக்கு இன்பம் ஆவதுவும்* செங்கண்மால் நாமம்*
புவிக்கும் புவியதுவே கண்டீர்*
கவிக்கு நிறை பொருளாய் நின்றானை* நேர்பட்டேன்*
பார்க்கில் மறைப்பொருளும்* அத்தனையே தான். 69

2451:
தான் ஒருவனாகித்* தரணி இடந்தெடுத்து*
ஏன் ஒருவனாய்* எயிற்றில் தாங்கியதும்*

யான் ஒருவன் இன்று* அறிகின்றேன் அல்லேன்*
இருநிலத்தைச்* சென்றுங்கு அடிப்படுத்த சேய். 70

2452:
சேயன் அணியன்* சிறியன் மிகப்பெரியன்*
ஆயன் துவரைக்கோனுய்* நின்ற மாயன்*
அன்று ஓதிய* வாக்கதனைக் கல்லார்*
உலகத்தில் ஏதிலராய்* மெய்ஞ்ஞான மில். 71

2453:
'இல்லறம் இல்லேல்* துறவறமில்' என்னும்*
சொல் அறம் அல்லனவும்* சொல் அல்ல*
நல்லறம் ஆவனவும்* நால்வேத மாத்தவமும்*
நாரணனே யாவது ஈதன்று என்பாரார்? 72

2454:
ஆரே அறிவார்* அனைத்து உலகும் உண்டுமிழ்ந்த*
பேராழியான் தன் பெருமையை*
கார்செறிந்த கண்டத்தான்* எண்கண்ணன் காணுன்*
அவன் வைத்த பண்டைத் தானத்தின் பதி. 73

2455:
பதிப்பகைஞர்க்கு ஆற்றுது* பாய்திரை நீர்ப் பாழி*
மதித்தடைந்த வாளரவந் தன்னை*
மதித்தவன்தன் வல்லாகத் தேற்றிய* மாமேனி மாயவனை*
அல்லாது ஒன்று ஏத்தாது என் நா. 74

2456:
நாக்கொண்டு* மானிடம் பாடேன்*
நலமாகத் தீக்கொண்ட* செஞ்சடையான் சென்று*
என்றும் பூக்கொண்டு வல்லவாறு* ஏத்த மகிழாத*
வைகுந்தச் செல்வனுர்* சேவடிமேல் பாட்டு. 75

2457:
பாட்டும் முறையும்* படுகதையும் பல்பொருளும்*
ஈட்டிய தீயும் இருவிசும்பும்*
கேட்ட மனுவும்* சுருதி மறை நான்கும்*
மாயன் தனமாயையில் பட்டதற்பு. 76

2458:
தற்பென்னைத்* தான் அறியானேலும்*
தடங்கடலைக் கற்கொண்டு* தூர்த்த கடல்வண்ணன்*
எற்கொண்ட வெவ்வினையும் நீங்க* விலங்கா மனம் வைத்தான்*
எவ்வினையும் மாயுமால் கண்டு. 77

2459:
கண்டு வணங்கினுர்க்கு* என்னுங்கொல்*
காமன் உடல் கொண்ட* தவத்தாற்கு உமையுணர்த்த*
வண்டலம்பும் தாரலங்கல் நீள்முடியான்* தன் பெயரே கேட்டிருந்து*
அங்கு ஆரலங்கல் ஆனமையால் ஆய்ந்து. 78

2460:
ஆய்ந்து கொண்டு* ஆதிப் பெருமானை*

அன்பினால் வாய்ந்த* மனத்து இருந்த வல்லார்கள்*
ஏய்ந்த தம் மெய்குந்தமாக* விரும்புவரே*
தாமும் தம் வைகுந்தம் காண்பார் விரைந்து. 79

2461:
விரைந்தடைமின் மேல் ஒருநாள்* வெள்ளம் பரக்க*
கரந்துலகம்* காத்து அளித்த கண்ணன்*
பரந்துலகம்* பாடின ஆடின கேட்டு*
படுநரகம் வீடின வாசற் கதவு. 80

2462:
கதவு மனம் என்றும்* காணலாம் என்றும்*
குதையும் வினையாவி தீர்ந்தேன்*
விதையாக நல்தமிழை வித்தி* என் உள்ளத்தை நீவிளைத்தாய்*
கற்றமொழி ஆகிக் கலந்து. 81

2463:
கலந்தான் என் உள்ளத்துக்* காமவேள் தாதை*
நலந்தானும்* ஈதொப்பது உண்டே*
அலர்ந்தலர்கள் இட்டேத்தும்* ஈசனும் நான்முகனும்*
என்று இவர்கள் விட்டேத்த* மாட்டாத வேந்து. 82

2464:
வேந்தராய் விண்ணவராய்* விண்ணாகித் தண்ணளியாய்*
மாந்தராய் மாதாய்* மற்று எல்லாமாய்*
சார்ந்தவர்க்குத் தன்னால்தான் நேமியான்* மால்வண்ணன் தான் கொடுக்கும்*
பின்னால்தான் செய்யும் பிதிர். 83

2465:
பிதிரும் மனம் இலேன்* பிஞ்ஞகன் தன்னோடு,*
எதிர்வன் அவன் எனக்கு நேரான்*
அதிரும் கழற்கால மன்னனையே* கண்ணனையே*
நாளும் தொழக் காதல் பூண்டேன் தொழில். 84

2466:
தொழில் எனக்குத்* தொல்லை மால்தன் நாமம் ஏத்த*
பொழுது எனக்கு மற்றதுவே போதும்*
கழிசினத்த வல்லாளன்* வானரக்கோன் வாலி மதன் அழித்த*
வில்லாளன் நெஞ்சத்து உளன். 85

2467:
உளன்கண்டாய் நன்னெஞ்சே* உத்தமன் என்றும் உளன்கண்டாய்*
உள்ளுவார் உள்ளத்து உளன்கண்டாய்*
தன் ஒப்பான் தானாய்* உளன்காண் தமியேற்கும்*
என் ஒப்பார்க்கு ஈசன் இமை. 86

2468:
இமையப் பெருமலை போல்* இந்திரனார்க்கு இட்ட*
சமய விருந்துண்டு ஆர்* காப்பார்*
சமயங்கள் கண்டான் அவை காப்பான்* கார்க்கண்டன் நான்முகனோடு*
உண்டான் உலகோடுயிர். 87

2469:

உயிர்கொண்டு உடல் ஒழிய* ஓடும் போதோடி*
அயர்வென்ற தீர்ப்பான்* பேர் பாடி*
செயல்தீரச் சிந்தித்து* வாழ்வாரே வாழ்வார்*
சிறுசமயப் பந்தனையார் வாழ்வேல் பழுது. 88

2470:
பழுதாகாது ஒன்று அறிந்தேன்* பாற்கடலான் பாதம்*
வழுவா வகை நினைந்து* வைகல் தொழுவாரை*
கண்டு இறைஞ்சி வாழ்வார்* கலந்த வினைகெடுத்து*
விண்திறந்து வீற்று இருப்பார் மிக்கு. 89

2471:
வீற்றிருந்து* விண்ணுள வேண்டுவார்*
வேங்கடத்தான் பால்திருந்த* வைத்தாரே பல்மலர்கள்*
மேல்திருந்தி வாழ்வார்* வருமதி பார்த்து அன்பினராய்*
மற்றவர்க்கே தாழ்வாய் இருப்பார் தமர்* 90

2472:
தமராவர் யாவருக்கும்* தாமரை மேலாற்கும்*
அமரர்க்கும் ஆடரவார்த் தார்க்கும்*
அமரர்கள் தாள் தாமரை* மலர்கள் இட்டு இறைஞ்சி*
மால்வண்ணன் தாள் தாமரை அடைவோம் என்று* 91

2473:
என்றும் மறந்து அறியேன்* என் நெஞ்சத்தே வைத்து*
நின்றும் இருந்தும் நெடுமாலை*
என்றும் திருவிருந்த மார்பன்* சிரீதரனுக்கு ஆளாய்*
கருவிருந்த நாள்முதலாக் காப்பு. 92

2474:
காப்பு மறந்து அறியேன்* கண்ணனே என்று இருப்பன்*
ஆப்பு அங்கொழியவும் பல்லுயிர்க்கும்*
ஆக்கை கொடுத்து அளித்த* கோனே குணப்பரனே*
உன்னை விடத்துணியார்* மெய்தெளிந்தார் தாம். 93

2475:
மெய்தெளிந்தார் என் செய்யார்* வேறுனர் நீறுக*
கைதெளிந்து காட்டிக் களப்படுத்து*
பைதெளிந்த பாம்பின் அணையாய்* அருளாய் அடியேற்கு*
வேம்பும் கறியாகும் என்று. 94

2476:##
ஏன்றேன் அடிமை* இழிந்தேன் பிறப்பு இடும்பை*
ஆன்றேன் அமரர்க் கமராமை*
ஆன்றேன் கடன்நாடும் மண்ணாடும்* கைவிட்டு*
மேலை இடநாடு காண இனி. (2) 95

2477:##
இனி அறிந்தேன்* ஈசற்கும் நான்முகற்கும் தெய்வம்*
இனி அறிந்தேன்* எம்பெருமான் உன்னை*
இனி அறிந்தேன்* காரணன்நீ கற்றவைநீ* கற்பவைநீ*
நற்கிரிசை நாரணன்நீ* நன்கு அறிந்தேன் நான். (2) 96

**திருமழிசையாழ்வார் திருவடிகளே சரணம்.**